31.07.2026.

S.T.C.No. 433/2021

புகார்தாரர் – திரு. கணபதி ஆசாரி, த/பெ. திரு. வேலாயுதம்.

<u>சாட்சி சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டார்.</u>

நான் இந்த வழக்கில் வாதி ஆவேன். நான் எதிரி பிரான்சிஸ்க்கு எதிராக காசோலை மோசடிக்காக வழக்கு தாக்கல் செய்திருந்தேன். தற்போது நானும் எதிரியும் நீதிமன்றத்திற்கு வெளியே எங்களது பிரச்சனைகளை பெரியவர்கள் முன்னிலையில் பேசி முடித்துக் கொண்டோம். எனக்கு செலுத்த வேண்டிய தொகையை எதிரி முழுவதுமாக செலுத்தி விட்டார். இனி முதற்கொண்டு எனக்கும் எதிரிக்கும் எந்த பின்தொடர்ச்சியும் கிடையாது. எதிரியை இந்த வழக்கில் இருந்து விடுவிக்க எனக்கு ஆட்சேபனைகள் கிடையாது. எனவே இந்த வழக்கை திரும்பப் பெற எனக்கு அனுமதிக்க வேண்டி பிரார்த்திக்கிறேன்.